பக்கங்கள் 12

விலை ரூ. 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 38
கதிர் : 175

சனிக்கிழமை 20 மே 2023

வைகாசி 06 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# ஜனாதிபதித் தேர்தலை நடத்தவே ரணில் முஸ்தீபு!

## சஜித் வெளியிட்ட தகவல்



கொழும்பு, மே 20

ஜனாதிபதித் தேர்தலை முற்கூட்டியே நடத்துவதற்கான தயார்ப்படுத்தல்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டுள்ளதாகத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. எனவே, எந்தச் சந்தர்ப்பத்தில் தேர்தல் நடத்தப்பட்டாலும், அதனை எதிர்கொள்ள நாம் தயாராகவே உள்ளோம் - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். »11

## மாணவியை காணவில்லை

மன்னார், மே 20

மன்னார் - முசலிப் பகுதியில் 15 வயதுப் பாடசாலை மாணவி ஒருவரைக் காணவில்லை என்று சிலாவத்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. »11

## பொலிஸ் சார்ஜன்ட் விபத்தில் இறப்பு!

யாழ்., மே 20

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர், விபத்தில் காயமடைந்த நிலையில் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். லக்ஸ்மன் சகார சுரவீர (வயது - 46) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார். இவர் கடந்த 15ஆம் திகதி கொக்காவில் நோக்கிச் செல்லும் போது எதிரே வந்த லொறியுடன் »11



## டிஜிற்றல் மயமாக்கலுக்கு விரைந்து செயற்படுங்கள்!

### ஜனாதிபதி ரணில் உத்தரவு
### பசுமை பேணவும் அழைப்பு

கொழும்பு, மே 20

நாட்டை டிஜிற்றல் பொருளாதாரத்தை நோக்கி கொண்டுச் செல்லும் பணியை துரிதப்படுத்துவது தொடர்பிலான அறிக்கையொன்றை ஒரு மாதத்துக்குள் சமர்ப்பிக்குமாறு »11

## சூனியத்தை நீக்குவதாக பெண்களிடம் சில்மிஷம்

### போலிச்சாமியார் கைது

முல்லைத்தீவு, மே 20

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் - முத்தையன்கட்டு ஜீவநகர் பகுதியில் சூனியத்தை நீக்குவதாகத் தெரிவித்து பெண்களுடன் சில்மிஷம் »11



## வடக்கு ஆளுநருக்கு எதிராக யாழில் நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம், மே 20

வடமாகாண ஆளுநராக திருமதி சார்ள்ஸ் நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக, இலஞ்சம் ஊழலுக்கு எதிரான அமைப்பினரால் நேற்றுப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தில் ஆறு பேர் கலந்துகொண்டனர். »11

### தொண்டைமானாறில்

## 8 பவுண் நகை, பணம் கதவுடைத்து திருட்டு

யாழ்ப்பாணம், மே 19

யாழ்ப்பாணம் தொண்டைமானாறில் நேற்றுமுன்தினம் 8 பவுண் நகைகள், ஒன்றரை இலட்சம் ரூபா பணம் மற்றும் பெறுமதியான பொருள் »11

### குற்றப்பிரேரணை விவகாரம்;

## விவாதத்தைப் பார்வையிடுவதற்கு கோருகின்றார் ஜனக ரத்நாயக்க!

கொழும்பு, மே 20

தனக்கு எதிரான குற்றப்பிரேரணை மீதான விவாதத்தை நேரில் பார்வையிட அனுமதி வழங்குமாறு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்கவிடம் »11

### வடக்கு மாகாண

## சுகாதார சேவைகள் பணிப்பாளராக மருத்துவர் சத்தியமூர்த்தி நியமனம்!



யாழ்ப்பாணம், மே 20

வடக்கு மாகாணத்தின் சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளராக மருத்துவக் கலாநிதி த.சத்தியமூர்த்தி நேற்றுப் பொறுப்பேற்றார்.

வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக ஒருவர் »11

## மத்தியின் கீழுள்ள ஒருவர் மாகாண நிர்வாகத்தில் ஏன்?

### வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி

யாழ்ப்பாணம், மே 20

மத்தியின் அதிகாரத்துக்குட்பட்ட நிர்வாகி ஒருவரால், மாகாண அதிகாரங்கள் கையாளப்படுவதானது மாகாணசபை முறைமையை நலிவுறச் செய்யும் விடயமாகும் என்று வடமாகாண »11

## வடக்கு ஆளுநரின் வாசஸ்தலத்தில் மந்திரிக்கப்பட்ட பொருள்கள் மீட்பு!

யாழ்ப்பாணம், மே 20

வடக்கு மாகாண ஆளுநரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இருந்து மந்திரிக்கப்பட்ட பொருள்கள் மீட்கப்பட்டு உரிய முறையில் அழிக்கப்பட்டன என்று ஆளுநர் செயலகத் »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்டவர்களுக்காக குரல்கொடுப்பதை நிறுத்தோம்

## தமிழினப்படுகொலை நினைவேந்தலை முன்னிட்டு கனேடியப் பிரதமர் அறிக்கை

ஒட்டவா, மே 20

**மே 18ஐ, தமிழினப்படுகொலை நினைவேந்தல் நாளாகப் பிரகடனம் செய்யும் பிரேரணையை நாடாளுமன்றம் கடந்த ஆண்டில் ஒருமனதாக நிறைவேற்றியது. இந்த மோதலில் பாதிக்கப்பட்டவர்களதும், தப்பிப் பிழைத்தோரதும் உரிமைகளுக்காகவும், இலங்கையில் தொடர்ந்தும் நெருக்கடியை எதிர்கொள்வோருக்காகவும் குரல் கொடுப்பதைக் கனடா நிறுத்தமாட்டாது - இவ்வாறு கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.**



கனேடியப் பிரதமர் அலுவலகம் தமிழினப் படுகொலை நினைவேந்தல் நாளை முன்னிட்டு பிரதமமந்திரி இந்த அறிக்கையை வெளியிடுவதாகக் குறிப்பிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் 14 ஆண்டுகளுக்கு முன்பு முடிவுக்கு வந்த ஆயுதப் போரின்போது ஏற்பட்ட துயர்நிறைந்த உயிரிழப்புகள் குறித்து இன்று நாம் ஆழ்ந்து சிந்திக்கிறோம். முள்ளிவாய்க்கால் படுகொலை உட்பட்ட சம்பவங்களில் பல பத்தாயிரம் தமிழர்கள் உயிரிழந்து, மேலும் பலர் காணாமல் ஆக்கப்பட்டார்கள், காயமடைந்தார்கள் அல்லது இடம்பெயர்க்கப்பட்டார்கள். அர்த்தமற்ற இந்த வன்முறையால் ஏற்பட்ட வேதனையுடன் வாழும் போரால் பாதிக்கப்பட்டவர்கள், தப்பிப்பிழைத்தோர் மற்றும் அவர்களது அன்புக்குரியோர் ஆகியோரை நாம் இன்று நினைவில் கொள்கிறோம்.

நாடு முழுவதிலும் நான் கடந்த பல ஆண்டுகளில் சந்தித்தவர்களின் அனுபவங்கள் உட்பட, போரால் பாதிக்கப்பட்ட தமிழ்க் கனேடியர்களின் அனுபவங்கள் மனித உரிமைகள், சமாதானம், ஜனநாயகம் என்பன குறைத்து மதிப்பிடப்படக் கூடாதென்பதற்கான நீடித்திருக்கும் நினைவூட்டலாக அமைகின்றன.

இதன் காரணமாகவே, மே 18ஐ, தமிழினப் படுகொலை நினைவேந்தல் நாளாகப் பிரகடனம் செய்யும் பிரேரணையை நாடாளுமன்றம் கடந்த ஆண்டில் ஒருமனதாக நிறைவேற்றியது. இந்த மோதலில் பாதிக்கப்பட்டவர்களதும், தப்பிப் பிழைத்தோரதும் உரிமைகளுக்காகவும், இலங்கையில் தொடர்ந்தும் நெருக்கடியை எதிர்கொள்வோருக்காகவும் குரல் கொடுப்பதைக் கனடா நிறுத்தமாட்டாது.

இலங்கையில் நிலவும் மனித உரிமைகள், பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் குறித்து நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை அரசிடம் கோரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்தை எமது சர்வதேச பங்காளிகளுடன் இணைந்து 2022ஆம் ஆண்டு ஒக்ரோபரில் நாம் நிறைவேற்றினோம். இலங்கையில் எதிர்வரும் ஆண்டுகளில் சமாதானத்தையும், மீளிணக்கத்தையும் அடைவதற்கு இன்றியமையாத அம்சங்களான மதம், நம்பிக்கை, பன்மையியல் ஆகியவற்றின் சுதந்திரத்தை வலியுறுத்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதில் கனடா உலக நாடுகளுக்குத் தலைமைத்துவம் வழங்கியுள்ளதுடன், உலகம் முழுவதும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நாம் தொடர்ந்தும் செயலாற்றுவோம். அத்துடன், இலங்கைத் தீவில் புரியப்பட்ட மனித உரிமை மீறல்களுக்காக இலங்கை அரச அதிகாரிகள் நான்கு பேர் மீது 2023ஆம் ஆண்டு ஜனவரியில் எமது அரசு தடைகளையும் விதித்தது.

தமிழ்க் கனேடியர்கள் எமது நாட்டுக்கு ஆற்றிய மற்றும் தொடர்ந்து ஆற்றிவரும் பல்வேறு பங்களிப்புகளையும் கண்டுணருமாறு கனேடிய அரசின் சார்பாக அனைத்துக் கனேடியர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன். இலங்கையில் ஆயுதப் போரால் ஏற்பட்ட தாக்கம் பற்றி அறிந்துகொள்ளுமாறும், பாதிக்கப்பட்டவர்களுக்கும், அன்புக்குரியவர்களை இழந்தவர்களுக்கும் ஆதரவை வெளியிடுமாறும் அனைவரையும் ஊக்குவிக்கிறேன் - என்றுள்ளது. (ஒ-இ)

# இனப்படுகொலைக்குப் பொறுப்புக்கூற கோத்தாவைக் கைது செய்யவேண்டும்

## கனேடிய கென்சவேர்ட்டிவ் கட்சி கோரிக்கை

ரொரன்ரோ, மே 20

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவை கைது செய்யவேண்டும் என கனடாவின் கென்சவேர்ட்டிவ் கட்சியின் பியரே பொய்லிவ்வேர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் 14 ஆவது ஆண்டைக் குறிக்குமுகமாக விடுத்துள்ள அறிக்கையில் இந்தவேண்டுகோளை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கோத்தபாய ராஜபக்சவை கைது செய்யவேண்டும். அதன்மூலம் அவர் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் தனது குற்றங்கள் குறித்து பதிலளிக்கும் நிலையை ஏற்படுத்தலாம். இலங்கைப் போரில் சிக்குண்டதால் இலங்கையில் தமிழ் மக்களும் ஏனைய சமூகக் குழுக்களும் 25 ஆண்டுகளாக கற்பனை செய்யமுடியாத துயரங்களில் சிக்குண்டனர். தொடர்ச்சியான வன்முறையும் அழிவும் எண்ணிக்கையற்ற இலங்கையர்களின் உயிரிழப்புக்குக் காரணமாக அமைந்துள்ளன. அமைதியையும் சுதந்திரத்தையும்தவிர வேறு எதனையும் வேண்டாத ஆயிரக்கணக்கான தமிழர்கள் மோதலின் இறுதி மாதங்களில் கொல்லப்பட்டனர்.

தமிழினப்படுகொலை நினைவேந்தல் தினத்தில் இலங்கையின் உள்நாட்டுப் போரின் இறுதித் தருணங்களில் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களின் நினைவுகளை நாங்கள் கௌரவிக்கின்றோம். கொல்லப்பட்ட பாதிக்கப்பட்ட அறிந்தவர்கள் அறியாதவர்களை, இலங்கையின் வரலாற்றில் இருண்ட யுகத்தில் இனப்படுகொலை போர்க் குற்றங்கள் அநீதிகளால் பாதிக்கப்பட்டவர்களை நாங்கள் நினைவுகூருகின்றோம்.

கடந்த காலங்களின் காயங்களை எதிர்காலத்துக்கான நம்பிக்கைகளாக மாற்றமுடியும்.

ராஜபக்ச அரசாங்கத்தை எதிர்ப்பதில் உலகுக்குத் தலைமைதாங்கிய கனடாவின் முன்னையை கென்சவேர்ட்டிவ் அரசாங்கங்களை தற்போதைய அரசாங்கம் பின்பற்ற வேண்டும். ராஜபக்ச அரசாங்கம் இழைத்த இனப்படுகொலை மற்றும் ஏனைய கண்டிக்கத்தக்க குற்றங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து 2013இல் பொதுநலவாய உச்சிமாநாட்டை கனடா புறக்கணித்தது. ஏனைய நாடுகளும் இதனைப் பின்பற்றி ராஜபக்ச ஆட்சியாளர்களைப் புறக்கணிக்கும் நிலையை ஏற்படுத்தியது உலகம், தமிழ் மக்களுக்கு ஆதரவாக நின்றது.

இனப்படுகொலையில் ஈடுபட்டவர்களை பொறுப்புக்கூறுமாறு கென்சவேர்ட்டிவ்கள் இன்று வேண்டுகோள் விடுக்கின்றனர். குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை கைது செய்ய வேண்டும் என்ற இலங்கையின் மனித உரிமை பரப்புரையாளர்களின் வேண்டுகோளுடன் நாங்கள் இணைந்துகொள்கின்றோம். இதன் மூலம் அவர் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் தனது குற்றங்கள் குறித்துப் பதிலளிக்கமுடியும் - என்று தெரிவித்துள்ளார். (ஒ-இ)




# சமாதானம், ஐக்கியம் வேண்டி உயிர்நீத்தவர்களுக்கு அஞ்சலி!

வவுனியா, மே 20

பயங்கரவாத போரில் உயிர்நீத்த மூவின மக்களுக்கு வவுனியாவில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

வன்னி மக்கள் ஒன்றியம் என்ற அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியா மாநகரசபை மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் சமாதானத்தையும் ஐக்கியத்தையும் போதித்து மதத்தலைவர்களால் சமாதானப் புறாக்கள் பறக்கவிடப்பட்டன.

அத்துடன் இறந்தவர்கள் நினைவாக தென்னம் மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் எம்.பி.நடராஜா, இலங்கை தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்டச் செயலாளர் என்.கருணாநிதி, சிவசேனை அமைப்பினர், மூவினத்தைச் சேர்ந்த மதத்தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் குறிப்பாக சிங்கள மக்கள் பலர் நிகழ்வில் பங்கேற்று அஞ்சலித்தனர். (ச-18)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நிர்க்கதியானோருக்கு கரம்கொடுத்து நினைவேந்தலை அர்த்தமாக்குங்கள்

## அருட்பணி மாக்கஸ் அடிகளார் வேண்டுகோள்

**மன்னார், மே 20**

**முள்ளிவாய்க்கால் பேரவலத்தில் கணவனை, பெற்றோரை இழந்து நிர்க்கதியாகி தவிப்போருக்கு உதவிக்கரம் நீட்டும் போது நாம் செய்யும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அர்த்தமுள்ளதாக அமையும்.**

இவ்வாறு பேசாலை சமூகத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் தலைமன்னார் பங்குத் தந்தை அருட்பணி மாக்கஸ் அடிகளார் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

முள்ளிவாய்க்காலில் கொன்றொழிக்கப்பட்ட எமது உறவுகளின் ஆன்மாவின் நித்திய இளைப்பாற்றிக்காக இறை வேண்டுதல் கேட்டு நிற்கின்றோம். இந்த அவலம் பல்லாயிரக்கணக்கானோரை ஏதிலிகளாக - அநாதைகளாக மாற்றால்லல் கொண்டவர்களாக மாற்றியுள்ளது.

அவர்களின் கண்ணீரைத் துடைக்கவேண்டியது எமது பொறுப்பாகும். அவர்களுக்கு நாம் உதவிக்கரம் நீட்டும்போது முள்ளிவாய்க்காலில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதில் அர்த்தம் உண்டாகும். ஆகவே, அஞ்சலி செலுத்தும் இவ்வேளையில் நிர்க்கதியான ஒரு குடும்பத்தை அல்லது ஒரு குழந்தையையாவது காப்பாற்றவேண்டும் என்ற சிந்தனை கொண்டவர்களாக மாற்றம் அடைந்து செயலில் ஈடுபட வேண்டும் - என்றார். (ச-60)



# முள்ளிவாய்க்கால் பேரவலம் இளம் சந்ததிக்குக் கடத்துங்கள்

## பேசாலை நினைவேந்தலில் மதத்தலைவர்கள் வேண்டுகோள்

14 ஆண்டுகளுக்கு முன் மே 18 இல் கொடும்பகையின் வக்கிரகத்தால் கொன்றுகுவிக்கப்பட்ட ஈழத்தமிழினப் படுகொலை வரலாற்றை - இனமொன்றின் குரல்வளை திருகி எறியப்பட்ட பேரவலத்தை இன்றைய இளம் சந்ததியினருக்கு ஊடுகடத்துவது எங்கள் கடமையாகும். இவ்வாறு மன்னார் பேசாலை சமூகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் மதத்தலைவர்கள் சுட்டிக்காட்டினர்.

நிகழ்வில் பேசாலை பங்குத் தந்தை மற்றும் உதவிப் பங்குத் தந்தையர்கள், அருட்பணியாளர்கள், தேசகீர்த்தி சிவஸ்ரீ மஹா தர்மகுமாரக் குருக்கள், மதத்தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்று மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து மதத் தலைவர்களால் அஞ்சலி உரைகள் நிகழ்த்தப்பட்டன.

இதன்போது முள்ளிவாய்க்காலில் ஈழத்தமிழினம் அழிக்கப்பட்ட- உரிமை இழக்கப்பட்ட வரலாற்றை இன்றைய இளம் சந்ததிக்கு கடத்தவேண்டும் என வலியுறுத்தப்பட்டது. (ச-60)

# இனப்படுகொலை வலிகள் புத்தூரில் நாடக ஆற்றுகை

யாழ்ப்பாணம், மே 20

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவுநாள் நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது.

புத்தூர் கலைமதி மக்கள் மண்டபத்தின் முன்பாகவுள்ள விளையாட்டு மைதானத்தில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் வட பிராந்தியச் செயலாளர் கா.செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் முள்ளிவாய்க்கால் மண்ணில் இறுதிப்போரில் கொல்லப்பட்ட உறவுகளை நினைந்து ஒரு நிமிட மௌனஅஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து போரில் உயிர்நீத்தோர் அனுபவித்த வலிகள் நிறைந்த வாழ்வை வெளிப்படுத்தும் வகையில் செம்முகம் ஆற்றுகைக் குழுவினர் வழங்கிய நாடக ஆற்றுகை இடம்பெற்றது.

இறுதியில் முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி காய்ச்சப்பட்டு பொதுமக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. (ச-66)

# கிளி. பசுமைப் பூங்காவில் முள்ளிவாய்க்கால் நினைவு

கிளிநொச்சி, மே 20

தமிழ்த் தேசிய இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் கிளிநொச்சி பசுமைப் பூங்காவில் இடம்பெற்றது.

பூங்காவில் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் முற்றத்தில் சைவ, கிறிஸ்தவ மதகுருமார்கள் பொதுச்சுடரை ஏற்றினர்.

தொடர்ந்து மெழுகுவர்த்தி ஏந்தியவாறு இறுதிப்போரில் கொன்றுகுவிக்கப்பட்ட உறவுகளை மக்கள் நினைவேந்தி மலரஞ்சலி செலுத்தினர்.



நிகழ்வில் மதத்தலைவர்கள், பிரதேசசபை முன்னாள் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச)




உப்பில்லாட்டித் தெரியும் உப்பின் அருமை. அப்பன் இல்லாட்டித் தெரியும் அப்பன்ர அருமை எண்டு எங்கட ஆக்கள் சொல்லுறவை. அப்பிடி ஒராளின்ர அருமையை முந்தநாள் உருத்திரபுரம் சிவன் கோயில்ல நடந்த ஆர்ப்பாட்டத்தில அங்கத்தைச் சனங்கள் நல்லா உணர்ந்திருப்பினம். உருத்திரபுரம் சிவன் கோயில் காணிக்குள்ள தொல்லியல் எச்சங்கள் இருக்கெண்டு தெரிஞ்சவுடனேயே, திணைக்களக்காரர் வரிஞ்சு கட்டிக் கொண்டு அங்கவர வெளிக்கிட்டவை. ஆனால் ஊர்ச்சனத்தை திரட்டி, தொடர்ச்சியாப் போராடி, கொஞ்சக்காலம் எண்டாலும் தொல்லியல் திணைக்களத்தை அந்தக் கோயில் பக்கம் தலைவைச்சுப் படுக்காதமாதிரிச் செய்தவர் அந்தக் கோயிலின்ர முந்தின தலைவர் பசுபதிப்பிள்ளை ஐயாதான். எதுக்கும் அசைஞ்சு குடுக்காத மனுசன். தலையே போனாலும், கோயிலைப் பாதுகாத்தே தீருவன் எண்டு அவர் ஒற்றைக்காலில நிண்டவர். ஆனால் திடீரெண்டு அவர் காலமாகிப் போக, இப்ப நிலை தலைகீழாகிப் போச்சுது.

முந்தநாள் கோயிலுக்கு தொல்லியல் திணைக்களம் வாறதெண்டு இருந்தது. அதால பழையபடி ஊர்ச்சனமும், கோயில்காரரும், அரசியல் கட்சியளும் போராட்டம் நடத்தினவை. அண்டைக்கு முள்ளிவாய்க்கால் தினமெண்டதால அந்த நினைவேந்தலையும் செய்து, முள்ளிவாய்க்கால் கஞ்சியும் குடுக்கிறதெண்டு ஏற்பாடு. போராட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கட்சியளைத் தவிர, சந்திரகுமாரும் போனவர். அதால நினைவேந்தல் தீபம் ஏத்துறதுக்கு அவரையும் விடுவமெண்டு கோயில்காரர் சிலர் பிளான் போட்டிருக்கினம். ஆனால் 'முள்ளிவாய்க்காலில சனமொண்டும் சாகேலை. அங்க இனப்படுகொலை நடக்கேலை' எண்டு சொன்ன சந்திரகுமாரை எப்பிடி நினைவேந்தல் தீபம் ஏத்தவிடலாம் எண்டு அங்க நிண்ட சனம் கொந்தளிக்கத் தொடங்க, அவர் அந்த இடத்தை விட்டு மாறிட்டார். அதுக்குப் பிறகுதான் தீபம் ஏத்தி, கஞ்சி குடுத்து போராட்டம் முடியிற கட்டத்துக்கு வந்தது.

அப்பதான், சிவபூசையில 'கரடி' புகுந்தமாதிரி ஒராள் வந்தார். தாடிக்கார அமைச்சரின்ர கிளிநொச்சிக்கான 'வால்' அவர்தான். போராட்டத்தில நிண்ட கோயில் நிர்வாகக்காரர் சிலர், அவரைக் கண்டவுடன பல்லிளிச்சபடி ஓடிப்போய், கோயிலை சுத்திக்காட்ட வெளிக்கிட்டிருக்கினம். அவ்வளவு நேரமும் வெயில் எண்டும் பாராமல் போராடின சனமும், தமிழ்த் தேசிய அரசியல் கட்சியளும், இப்பிடி எல்லாருக்கும் கோயில்க்காரர் முதுகு சொறிஞ்சு விடுறது பிடிக்காமல் அங்க இருந்து வெளியேறிட்டினம். ஏனெண்டால், எந்த அரசாங்கத்துக்கு எதிராப் போராடிச்சினமோ அந்த அரசாங்கத்தின்ர ஏவலாளுக்கு ஏன் இப்பிடி மரியாதை? உண்மையில சிவபூசையில 'கரடி' புகுந்தமாதிரி அவர் வரேக்க, அவருக்கும் எதிராத்தானே போராடி இருக்கவேணும்? ஆரெல்லாம் எங்கட முதுகில குத்துறாங்களோ அவங்களுக்கே முதுகு சொறிஞ்சு விடுற இப்பத்தை உருத்திரபுரம் கோயில் நிர்வாகத்தைப் பாக்கேக்க, சனத்துக்கு முந்தின தலைவர் பசுபதிப்பிள்ளை ஐயாவின்ர அருமை தான் நினைவுக்கு வந்திருக்கும்.

அதைவிட பெரிய பகிடி என்னெண்டா, கோயிலைச் சுத்திப் பாத்திட்டுப் போன தாடியமைச்சரின்ர 'வாலார்' தன்ர பேஸ்புக்கில 'கோயிலுக்குப் போனன், அங்க அன்னதானம் எண்டதால சனம் நிண்டிச்சு' எண்டு போராட்டத்தையும் கோயிலையும் கொச்சைப் படுத்தியிருக்கிறார். "கோடீஸ்வரப் பிள்ளைக்கு" எல்லாத்தையும் கொச்சைப்படுத்துறதுதானே முழுநேர வேலை.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய சேவைக்கு ஜூனில் 7,800 டிப்ளோமாதாரிகள்!

## கல்வியமைச்சர் அறிவிப்பு

**கொழும்பு, மே 20**

**7 ஆயிரத்து 800 டிப்ளோமாதாரிகளை ஆசிரிய சேவையில் இணைத்துக் கொள்வதற்கான நியமனக் கடிதங்கள் எதிர்வரும் ஜூன் மாதம் 15ஆம் திகதி வழங்கப்படவுள்ளது என கல்வியமைச்சர் தெரிவித்துள்ளார்.**

கல்வியமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரம்பும் வகையில் கல்வியியற் கல்லூரியில் பயிற்சி பெற்ற 7 ஆயிரத்து 800 டிப்ளோமாதாரிகள் ஆசிரிய சேவைக்கு உள்ளீர்க்கப்படவுள்ளனர்.

எதிர்காலத்தில் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் மொழி போன்ற ஆசிரியர் பற்றாக்குறையுள்ள பாடப் பிரிவுகளுக்கு அங்கீகாரம் பெற்று 35 வயதுக்குட்பட்ட பட்டதாரிகளை தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் ஆசிரியர்களாக இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சை ஆகிய இரண்டு பரீட்சைகளையும் ஒரே வருடத்தில் நடத்தும் வகையில் பரீட்சை அட்டவணை புதுப்பிக்கப்படும்.

இதேவேளை 2022ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை இந்தமாதம் 29ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. பரீட்சைக்குத் தேவையான அனுமதி அட்டைகள் மற்றும் நேர அட்டவணை உரிய தரப்பினருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

## வில்லிசை அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், மே 20

அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டிகளில் இரு தடவைகள் தங்கப் பதக்கம் வென்ற நி.மோகனதர்சனின் வில்லிசை அரங்கேற்ற நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை 21ஆம் திகதி பி.ப. 3.30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் பல்கலைக்கழக புவியியல்துறை முதுநிலை விரிவுரையாளர் சு.கபிலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் பிரதம விருந்தினராகவும், யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரியின் அதிபர் வே.சி.பெ.துசிதரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-ரி-66)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், மே 20

குப்பிழான் வடபத்திரகாளி அம்பாள் ஆலயம் வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 23ஆம் திகதி மாலை 6 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகவுள்ளது.

இந்த ஆலய அலங்கார உற்சவமானது 10 நாள்கள் நடைபெறும். 10ஆம் நாளான அடுத்தமாதம் முதலாம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அம்பாளுக்கு 108 சங்காபிஷேகமும், மறுநாள் இரண்டாம் திகதி வெள்ளிக்கிழமை வைகாசி விசாகப் பொங்கலும் நடைபெறும் என ஆலய பரிபாலன சபை தெரிவித்துள்ளது. (ஒ-ரி-66)

## செந்தில் தொண்டமான் ஆளுநராக கடமையேற்பு



கொழும்பு, மே 20

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்ட இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான் நேற்று வெள்ளிக்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இதன்போது அமைச்சர் ஜீவன் தொண்டமான், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், முன்னாள் உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-இ)

## சமகால இலக்கிய ஆய்வரங்கம்

கிளிநொச்சி. மே. 20

கிளிநொச்சி மாவட்டத்தில் 2000 ஆம் ஆண்டுக்குப் பின்னரான சமகால இலக்கிய முயற்சிகள் தொடர்பான ஆய்வரங்கம் மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 9.30மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலக திறன் விருத்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

காவேரி கலைமன்றத்தினர், தமிழியல் ஆய்வு நிறுவனம், கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மற்றும் கிளிநொச்சி பண்பாட்டுச் செயலகம் ஆகிய நிறுவனங்களின் அனுசரணைகளுடன் இணைந்து இந்த ஆய்வரங்கம் மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும் தமிழியல் ஆய்வு நிறுவனத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸின் வழிநடத்தல்களில் ஆய்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் ஆய்வரங்க நூல் வெளியீடு மற்றும் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தவர்களின் உரையும் இடம்பெறவுள்ளன. (ஒ-ரி)

## நடமாடும் மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம். மே . 20

யாழ் .போதனா மருத்துவக் குழுவினர்களால் புங்குடுதீவு பிரதேச மருத்துவமனையில் நடமாடும் மருத்துவமுகாம் இன்று 20ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

புங்குடுதீவு பிரதேசத்தைச் சேர்ந்த பொதுமக்கள் இந்த மருத்துவ முகாமில் பங்குபற்றிப் பயன்பெறுமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஒ-ரி)

## இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடுவீர்கள். மகிழ்ச்சி ஏற்படும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும்.

**மிதுனம் :** ஆதரவு உற்சாகம் தரும். தந்தைவழியில் திடீர் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் இழுபறியாக முடியும். எதிர்பாராத ஆதாயமும் உண்டாகும். புதிய முயற்சிகளைக் காலையிலேயே தொடங்குவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**சிம்மம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். கடன் வாங்குவதை தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வார்த்தைகளில் நிதானம் தேவை.

**கன்னி:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்ப்பது நல்லது. சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் சாதகமாக முடிந்து விடும்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் உண்டாகும். செலவு செய்யவேண்டி வரும். தெய்வ வழிபாடுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

**விருச்சிகம் :** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். சிலருக்கு எதிர்பாராத திடீர் செலவும் உண்டாகும்.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம் படும். ஆதாயம் ஏற்படக்கூடும். அலைச்சலும், செலவுகளும் ஏற்படும்.

**கும்பம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். செலவு செய்ய வேண்டி வரும். சிலருக்கு உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். ஆதாயம் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## இவர்கள் திருந்தப்போவதில்லை

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் தமிழர் தாயகம் நேற்றுமுன்தினம் மூழ்கிப்போனது. தமிழர் தாயகத்தைத் தாண்டி கொழும்பிலும் இரண்டாவது ஆண்டாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கடைப்பிடிக்கப்பட்டது. ஆனால், கடந்த ஆண்டு கொழும்பில் நினைவேந்தல் கடைப்பிடிக்கப்படும்போது காணப்பட்ட அமைதி இம்முறை இல்லாமல் போய்விட்டது.

போர் வெற்றியின் நாயகர்களாக – தமிழினத்தை கருவறுத்த ராஜபக்சக்களை தங்கள் கடவுளர்களாக சிங்கள மக்கள் தூக்கி மகுடம் சூட்டியிருந்தனர். பொருளாதார நெருக்கடி கழுத்தை நெரித்துக்கொண்டிருந்த சூழலில், தங்கள் வயிற்றில் அடிவிழுந்தவுடன் ராஜபக்சக்களை தூக்கி எறிவதற்கு அவர்கள் துளியும் பின்நிற்கவில்லை. கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி காலிமுகத்திடலில் 'கோத்தா கோ கம' அமைக்கப்பட்டது. மே மாதம் 9ஆம் திகதி பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த விலகினார். இவ்வாறு நடந்து சில நாள்களில் மே 17ஆம் திகதி கொழும்பில் முதன்முறையாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஒழுங்கமைக்கப்பட்டது. 'அரகலய' போராட்டத்துக்கு ஆதரவளித்த தமிழர்கள் சிலரின் இந்த முனைப்பை போராட்டத்தில் பங்கேற்ற சிங்களவர்களும் ஆதரித்திருந்தனர். காலிமுகத்திடலில் இந்த நினைவேந்தல் கடைப்பிடிக்கப்பட்டது. அன்றைய சூழலில் பொருளாதார நெருக்கடியில் இந்த நினைவேந்தலை குழப்புவதற்கோ, புலிகளை நினைவுகூருகின்றார்கள் என்று கூச்சலிடுவதற்கோ எந்தவொரு பௌத்த – சிங்கள இனவாதியும் அங்கு வரவில்லை. அன்றைய பொருளாதார நெருக்கடிக்குத் தீராத இனப்பிரச்சினையும் காரணம் என்ற கருத்தியல் அங்கு எழுந்திருந்தது. பெற்றோலுக்கு வரிசை, எரிவாயுவுக்கு வரிசை என்று எல்லாமே வரிசையுகங்களாகவே பொழுதுகள் விடிந்த அந்த நாள்களில் நினைவேந்தல்களுக்கு எதிராக குரலெழுப்ப அவர்களால் முடியாமற்போயிருந்தது. இந்தச் செயற்பாடுகளால் அவர்கள் தங்கள் பரவணிப் பழக்கத்திலிருந்து மாறிவிட்டார்கள் என்று நம்பியவர்களும் உண்டு.


அவர்கள் எப்போதும் மாறமாட்டார்கள் என்பதற்கு கொழும்பு பொரளையில் நேற்றுமுன்தினம் நடந்த சம்பவம் தக்க எடுத்துக்காட்டு. தங்களின் பொருளாதாரச் சுமை ஓரளவு இறங்கியதாக அவர்கள் உணர்ந்தவுடனேயே, பௌத்த – சிங்கள மேலாதிக்கத்தை கையில் எடுத்துக்கொண்டுவிட்டார்கள். போரில் கொல்லப்பட்ட மக்களை நினைவுகூர்ந்தே முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கடைப்பிடிக்கப்படுகின்றது. அப்படியான ஒன்றை 'புலிகளை நினைவுகூருகின்றார்கள்' என்று கோஷம் எழுப்பி தடுக்க முற்பட்டிருக்கின்றார்கள். இத்தகைய கடும்போக்குவாதிகளின் பின்னாலேயே சிங்கள மக்களும் அணிதிரளுகின்றார்கள். அப்படிப்பட்ட நிலையிலும் கூட, சிங்கள இனத்திலும் முற்போக்கானவர்கள் இருக்கின்றார்கள் என்பதையும் இந்த நிகழ்வு அடையாளம் காட்டியிருக்கின்றது. சிங்களக் கடும்போக்குவாதிகள் நினைவேந்தலைக் குழப்ப பகீரதப் பிரயத்தனம் செய்தபோது மனிதச் சங்கிலி அரண் அமைத்து நினைவேந்தல் நடைபெறுவதற்கு சிங்கள முற்போக்குவாதிகளும் உதவியிருந்தனர். இத்தகைய முற்போக்குவாதிகள் அன்றிலிருந்து இன்றுவரையில் இருக்கின்றார்கள்தான். ஆனால், அவர்களால் சிங்கள மக்கள் மத்தியில் பெரியதொரு மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. கால ஓட்டத்தில் அவர்களும் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் பக்கம் சென்றுவிடுவார்கள். இதுதான் இலங்கையின் வரலாறு – சாபம்.

இப்படிப்பட்ட தேசத்தில் எப்படி ஒன்றிணைந்து வாழ முடியும்? என்று தமிழர்களை இந்தக் கடும் போக்குவாதிகளே எண்ண வைக்கின்றார்கள். ஒருமித்த நாட்டுக்குள் பிளவுபடாத தேசத்துக்குள் தீர்வு என்று தமிழர் தரப்பு நல்லெண்ணத்தைக் காண்பித்தாலும் அவர்கள் அதைப் புரிந்துகொள்வதற்குத் தயாரில்லை. தங்களது தேசத்தில், நாட்டில் உயிரிழந்த தமது உறவுகளை நினைவுகூரக்கூட உரிமையில்லாதவர்கள் தமிழர்கள் என்பதுதான் அந்தக் கடும்போக்குவாதிகள் [illegible] அப்படிப்பட்டவர்களுடன் இணைந்து ஒன்றாக [illegible] வாழமுடியும்?

நாளொரு நல்வார்த்தை

"தண்ணீரில் ஏற்படும் அலைகள் பெரிதாகி கடைசியில் மறைந்துவிடும். அது போல, புகழ் பெருகி கடைசியில் ஒன்றுமில்லாமல் மறைந்து விடும்."

– ஷேக்ஸ்பியர்




# தமிழீழத்துக்கு பொதுவாக்கெடுப்பு

## அமெ. காங்கிரஸ் உறுப்பினர்கள் பிரதிநிதிகள் சபையில் பிரேரணை

**வொசிங்டன், மே 20**

**தமிழீழம் குறித்து பொதுவாக்கெடுப்பை நடத்தவேண்டும். இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்தவேண்டும் எனக் கோரும் தீர்மானமொன்றை அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் மக்கள் பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பித்துள்ளனர்.**

அமெரிக்க காங்கிரஸின் டெபராரொஸ் பில், ஜோன்சன் இருவரும் இணைந்து ஈழத்தமிழர்கள் ஜனநாயகரீதியாகவும் சமத்துவமாகவும் பிரதிநிதித்துவம் செய்யப்படவேண்டும், நீடித்த அமைதியான அரசியல் தீர்வைக் காண்பதற்கு பொதுவாக்கெடுப்பை நடத்த வேண்டும் எனக் கோரும் தீர்மானத்தை சமர்ப்பித்துள்ளனர்.

முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பின் 14 ஆவது வருடநினைவேந்தல் நிகழ்வுகளில் தமிழர்கள் ஈடுபட்ட தருணத்திலேயே அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தைச் சமர்ப்பித்துள்ளனர்.

அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானம் தமிழர் தாயகப்பகுதிகளை இலங்கை இராணுவம் தொடர்ந்தும் ஆக்கிரமித்துள்ளதாகவும் ஒடுக்குமுறையில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

தமிழ்மக்கள் தங்கள் சுதந்திரத்துக்காக குரல் எழுப்புவதைத் தடுக்கும் ஆறாவது திருத்தச்சட்டம் காரணமாக கருத்துச் சுதந்திரம் பாதிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் சமர்ப்பித்துள்ள தீர்மானம் தெரிவித்துள்ளது.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தவேண்டும், ஈழத்தமிழர்களின் பாரம்பரிய தாயகத்தை அங்கீகரிக்கவேண்டும் எனவும் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் தங்கள் தீர்மானத்தின் நகலில் தெரிவித்துள்ளனர். (ஒ-இ)

# 3 நாள்களில் கடவுச்சீட்டு

கடவுச்சீட்டுக்கான விண்ணப்பத்தை வீடுகளுக்கே அனுப்பி வைக்கும் புதிய முறை அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும் என்று குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்தார்.

இதற்காக 25 மாவட்டங்களையும் உள்ளடக்கிய 50 பிரதேச செயலக அலுவலகங்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும், கைரேகை பெறும் இயந்திரங்களைப் பொருத்தி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும், விண்ணப்பதாரர் அந்தப் பிரதேச செயலக அலுவலகத்துக்குச் சென்று கைரேகைகளைப் பதிவு செய்து ஒன்லைனில் அல்லது இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் பணத்தைச் செலுத்திய பின்னர் வீட்டுக்குச் செல்லமுடியும்.

இதன் பின்னர் மூன்று நாள்களுக்குள் கடவுச்சீட்டை வீட்டுக்கே அனுப்பி வைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)

நாளை

21.05.2023
ஞாயிற்றுக்கிழமை
வைகாசி 07

சுபநேரம் : 08.52 - 10.22
ராகுகாலம் : 04.22 - 05.52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரூபிக்கும் முன்னரே குற்றவாளியாக்காதீர்!

## ஊடகவியலாளர்களுக்கு நீதியமைச்சர் வேண்டுகோள்

**கொழும்பு, மே 20**

**ஒரு பிரதேசத்தில் இடம்பெறும் குற்றச்செயல்கள் தொடர்பில் மக்களிடம் கொண்டு செல்லும்போது செய்தியில் ஊடக தர்மத்தை ஊடகவியலாளர்கள் பேணவேண்டும். ஒருவர் குற்றவாளியாக நிரூபிக்கப்படும் முன்னரே அவரது புகைப்படங்களை, விவரங்களை தங்களது பேனா, கமரா மூலம் அம்பலப்படுத்துவதும் குற்றச்செயலே.**

-இவ்வாறு ஊடகவியலாளர் பயிற்சிப்பட்டறை நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் நீதியமைச்சர் விஜயதாஸ குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனநாயகத்தின் 4 ஆவது தூணாக ஊடகம் திகழ்கிறது. உலக நாடுகளின் ஆட்சியை தீர்மானிப்பதில் ஊடகங்களின் பங்களிப்பு அளப்பரியது.

ஒரு பிரதேசத்தில் இடம்பெறும் குற்றச்செயல்களை ஊடகவியலாளர்கள் மத்தியில் கொண்டு செல்லும்போது அவதானத்துடன் செயற்படவேண்டும்.

உதாரணமாக அண்மையில் களுத்துறையில் கடந்தவாரம் இடம்பெற்ற கொலைச் சம்பவத்தில் இறந்த சிறுமி உட்பட பெண்களின் புகைப்படங்கள் ஊடகங்களில் பிரசுரமாகின.

அத்துடன் சந்தேகநபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி குற்றவாளியென நீதிமன்று நிரூபிக்க முன்னரே 24 மணிநேரத்துக்குள் தங்களது பேனா, கமரா மூலம் ஊடகவியலாளர்கள், சந்தேகநபரின் புகைப்படத்தை அம்பலப்படுத்தி குற்றவாளியென மக்களிடம் கொண்டுசென்றுள்ளனர்.

மருத்துவப் பரிசோதனையில் சிறுமி துஷ்பிரயோகம் செய்யப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

இவ்வாறான செயற்பாடுகளால் சந்தேகநபர் ஒருவரின் குடும்பம் மனஉளைச்சலுக்கு ஆளாவதுடன் தொழில்களை இழப்பது மற்றும் பிள்ளைகள் பாடசாலைப் படிப்பைக் கைவிடும் நிலைமை என்பன ஏற்படுகின்றன என்பதை ஊடகவியலாளர்கள் கவனத்திற் கொள்ள வேண்டும் - என்றார். (ச-இ)

# வவுனியாவில் சட்டம், ஒழுங்கு மிக மோசமாகச் சீர்குலைவு!

## உடன் நடவடிக்கை எடுக்குமாறு செல்வம் எம்.பி. வலியுறுத்து

வவுனியா. மே 20

வவுனியாவில் பொலிஸார் இருந்தும் வன்முறைச் சம்பவங்கள் தலைதூக்கியுள்ளன. சட்டம், ஒழுங்கை பாதுகாக்க வேண்டிய பொலிஸார் இந்த அடாவடி செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்தியுள்ளார். வவுனியாவில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற தமிழீழ விடுதலை இயக்கத்தின் பொறுப்பாளராக இருந்த கிறிஸ்ரி குகராஜாவின் நினைவுதினத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியாவில் வாள்வெட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. கடத்தல், பணம்பறிப்பு, உயிர்மாய்ப்புகள் என்பனவும் இடம்பெற்று வருகின்றன. பொலிஸார் கடமைபுரிந்தும் வவுனியா ஒரு மோசமான நிலையை அடைந்துள்ளது.

அண்மையில் மரணித்த ஒரே குடும்பத்தை சேர்ந்த நால்வரின் உயிரிழப்பு தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு அமைச்சரிடம் கோரினோம். இவ்வாறான அடாவடிகள் தொடர்ந்தும் வவுனியாவில் நீடிக்கின்றது. அத்துடன் வனவளத்திணைக்களம், தொல்லியல் திணைக்களம் ஆகியவற்றின் செயற்பாடு வன்னியில் பரவலடைந்துள்ளது.

அடாவடிகளுக்கு முற்றுப்புள்ளிவைக்கும் செயற்பாட்டை கட்டுப்படுத்தி சட்டம் ஒழுங்கை பாதுகாக்க ஜனாதிபதி தனது அதிகாரத்தை பயன்படுத்த வேண்டும் - என்றார். (ச-110)



யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை போதைப்பொருள் விழிப்புணர்வு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ச-125)

# நல்லைக்குமரன் மலருக்கு ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம். மே,20

யாழ் மாநகரசபை. சைவசமய விவகாரக்குழு நடத்தும் நல்லைக்குமரன் 31 ஆவது மலருக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

15 ஆம் திகதி ஜூலை மாதம் இறுதியாக ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆக்கங்கள் அனுப்பும் போது கட்டுரைக்கான பக்கங்கள் 5 மற்றும் 7 ஆக அமைதலும், தமது விவரங்களில் முக்கியமாக முகவரி, தொலைபேசி இலக்கங்கள் குறிப்பிடப்படுதலும், ஏற்கனவே மலரில் வெளிவந்த ஆக்கங்கள் தவிர்க்கப்படுதலும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி saivasamayavi vaharam@gmail.com,. (ஒ-ரி)



இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன சங்கானைக் கிளையின் உதவி நிர்வாக முகாமையாளராக பணிபுரிந்து ஓய்வுபெற்றுச்செல்லும் செல்வி வசந்தி சிவரட்ணத்தின் பிரிவுபசார விழா சங்கானைக் கிளையில் அண்மையில் நடைபெற்றது. (ய)





# கமலாசனி வித்தியாலய மாணவி தேசிய ரீதியில் முதலிடம்

சாவகச்சேரி, மே 20

பாடசாலை மாணவர்களிடையே அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட சமூக விஞ்ஞானப் போட்டிகளில் தென்மராட்சி கல்வி வலய விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் தரம்-11 இல் கல்வி பயிலும் மாணவி ச.சேனுஜா, 200க்கு குறைந்த மாணவர்களைக், கொண்ட பாடசாலை வகை - 1 பிரிவில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

இவருக்கான கௌரவிப்பு நிகழ்வு தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகக் கேட்போர்கூட மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அபிராமி இராஜதுரை முதலிடம் பெற்ற மாணவிக்கு தங்கப்பதக்கத்தை அணிவித்து கௌரவித்தார்.

அத்துடன் இந்தப் போட்டியில் முதல் பத்து இடங்களைப் பெற்ற வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 33 மாணவர்களில் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 15 மாணவர்களுக்கு விருதுகளும் சான்றிதழ்களும் இந்த நிகழ்வில் வழங்கப்பட்டன. (ச-9)

# இறக்குமதிக் கட்டுப்பாடுகள் அடுத்த மாதம் தளர்வு

## ஐரோப்பிய ஒன்றியத்துக்கு இலங்கை உறுதியளிப்பு

கொழும்பு. மே 20

தற்போது நாட்டில் விதிக்கப்பட்டுள்ள இறக்குமதிக் கட்டுப்பாடுகளை நீக்குவதற்கான திட்டத்தை ஜூன் மாதத்துக்குள் முன்வைக்க இலங்கை விருப்பம் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பொருளாதார நிலைமைகளை கருத்திற்கொண்டு படிப்படியாக கட்டுப்பாடுகளை தளர்த்துவதாக ஐரோப்பிய ஒன்றியத்துக்கு அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

கடந்த ஏப்ரல் 25ஆம் திகதி நடைபெற்ற இலங்கை - ஐரோப்பிய ஒன்றிய கூட்டு ஆணைக்குழுவின் 25 ஆவது அமர்வின்போது இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுநோயின் விளைவாக 2020 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இறக்குமதிக்கு தடையை விதித்த இலங்கை பின்னர் பொருளாதார நெருக்கடி காரணமாக தடையை நீடித்தது.

இலங்கையின் இரண்டாவது பெரிய வர்த்தகப் பங்காளியான ஐரோப்பியஒன்றியம், இந்தத் தீர்மானத்தின் மீது அதிருப்தியை வெளிப்படுத்தியதுடன், தனது வர்த்தகப் பங்காளிகளுக்கு நியாயமற்றதாகக் கருதப்படும் பாதுகாப்புவாத வர்த்தகக் கொள்கைகளிலிருந்து விலகிச் செல்லுமாறு இலங்கையை மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

மார்ச் மாதத்தில், சர்வதேச நாணய நிதியம் இலங்கை தற்போது நடைமுறையில் உள்ள இறக்குமதி மற்றும் பரிமாற்ற கட்டுப்பாடுகளை படிப்படியாக நீக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என வெளிப்படுத்தியது. (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண்ணில் 1951 09 02

விண்ணில் 2023 05 16



## திரு. செல்லத்துரை ரகுநாதன்

வடமராட்சி உடுப்பிட்டி, இமையாணனைப் பிறப்பிடமாகவும் வியாபாரி மூலை மற்றும் தெகிவளை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. செல்லத்துரை ரகுநாதன் கடந்த (16.05.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் திருமதி தவமணிதேவி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்லத்துரை - மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு புதல்வரும் காலஞ்சென்ற தம்பையா - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மருமகனும் ராகுலன் (லண்டன்) ரம்சிகா (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், கிரிதரன், சர்மிளா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மகாலட்சுமி, ரங்கநாதன், ரேணுகா ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரித்திகா, அக்சரா, பிரனுதி ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற கமலாதேவி, திருநாவுக்கரசு, ரத்தினகோபால், சியாமளா ஆகியோரின் மைத்துனரும், திரு.தேவராஜாவின் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிஸ்ச மஹிந்த மலர்ச்சாலையில் இன்று (20.05.2023) சனிக்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (21.05.2023) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று கல்கிஸ்ச பொதுமயானத்தில் தகனம் செய்யப் படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

தகவல்
குடும்பத்தினர்
மனைவி - 0763568046
மகன் -ராகுலன் - 0447507557978
மகள் -ரம்ஷிகா - 0016122129807

9B, 4/4 பீட்டர்ஸ் லேன்,
தெகிவளை.

# கடத்தினரென நாடகமாடிய சிறுவன் பொலிஸால் கைது

இரத்தினபுரி காவத்தையிலிருந்து தன்னை வான் ஒன்றில் இனந்தெரியாதவர்கள் கடத்தி வந்ததாக பொலிஸாரிடம் பொய் முறைப்பாட ளித்த சிறுவனை மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைதுசெய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

காவத்தையில் குறித்த சிறுவனிடம் தாயார் ஏ.ரி.எம். இயந்திரத் தில் பணம் எடுத்துவரு மாறு அனுப்பியுள்ளார். பணத்தை எடுத்துவிட்டு குறித்த சிறுவன் வீடு செல்லாது அங்கிருந்து மட்டக்களப்புக்குச் சென் றுள்ளான்.

அங்கு மட்டக்களப்புப் பொலிஸ்நிலையம் சென்ற சிறுவன், காவத் தையிலிருந்து தன்னை வான் ஒன்றில் கடத்தி வரப்பட்ட நிலையில் வானிலிருந்து தப்பி ஓடிவந்ததாக பொலிஸா ரிடம் கூறியுள்ளான்.

அதனையடுத்து பொலி ஸார் மேற்கொண்ட விசாரணையில் குறித்த சிறுவன் இவ்வாறு 3 தட வைகள் வீட்டிலிருந்து பணத்தை எடுத்து தப் பியோடியவர் எனத் தெரியவந்துள்ளது. சிறு வனைக் கைதுசெய்த பொலிஸார் சிறுவனின் குடும்பத்தவர்களை வர வழைத்து எச்சரித்து உறவினர்களிடம் ஒப்ப டைத்தனர்.

(ச-இ)

# பெயர் மாற்றம்

முத்தமிழ் வீதி, கொட்டடி யாழ்ப்பாணத்தில் வசிக்கும் **செல்வராசா பற்குணம்** ஆகிய நான் எனது பெயரை **செல்வராசா அர்ஜுன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **செல்வராசா அர்ஜுன்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு உறுதிப் படுத்துகின்றேன்.

**- செல்வராசா அர்ஜுன் -**

CS/50482)AH-1

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமக

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் நடராசா கோவிந்தராசா பத்தர் (கோவிந்து)



தோற்றம் 25.02.1952

மறைவு 11.06.2021

திதி:- பிரதமை

வாழ்க்கை எனும் பாதையிலே
எம்மோடு பயணித்த எமது அப்பாவே!
இன்றுடன் ஈராண்டு முடிந்தாலும்
உங்கள் நினைவுகள்
எம்மைவிட்டு மறையாது அப்பா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**குடும்பத்தினர்.**

**021 222 3432,021 222 5184**


இல. 64 காரைக்காட்டு ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 14 . 01 . 1931

உதிர்வு 22 . 04 . 2023



கடந்த 22.04.2023 ஆம் திகதி இறைவனடி சேர்ந்த
எங்கள் குடும்பத் தலைவர்

## திரு. செல்லத்துரை நவரத்தினசாமி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (20.05.2023) சனிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று, வீட்டுக்கிருத்திய கிரியைகள் 22.05.2023 ஆம் திகதி முற்பகல் 10.00 மணியளவில் இல்லத்தில் நடைபெற வுள்ளது. அதனைத் தொடர்ந்து **கொக்குவில் கிழக்கு, பொற்பதிச் சந்தியிலுள்ள கஜன் மண்டபத்தில்** நண்பகல் 12.00 மணிக்கு ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதியபோசன நிகழ்வும் இடம் பெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 24913) I-6

**குடும்பத்தினர்.**

தொ.இல: 027 4936237
077 337 9263

100/14, சம்பியன் லேன்,
கொக்குவில்.

## MINISTRY OF URBAN DEVELOPMENT & HOUSING

## DEPARTMENT OF BUILDINGS
## INVITATION FOR BIDS

**Completion of Balance Work of New Building for Department of Excise at Point Pedro**
**[contract no:BD-291/Z2/18/RCT04/2023]**

1. **The Chairman, Regional Procurement Committee (Zone 2),** on behalf of the **Department of Buildings** now invitessealed bids from eligible and qualified bidders for "Completion of Balance Work of New Building for Department of Excise at Point Pedro" as described below and estimated to cost **Rs.15.3 million.**
   The construction period is **126 Days.**
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure(NCB).Since the Estimated Value of Work to be performed under this procurement is below Rs. 50 Mn, regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016(iv) & 03/2020.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for Grade **C7, C6 or C5** with the Construction Industry Development Authority (CIDA), valid until the date of closing of the bids. Further the registration should be valid at the date of award.
   "The bidders shall also register themselves with Registrar of Public Contracts, Sri Lanka, in term of the Public Contracts Act No. 03 of 1987. The original certificate of registration (PCA 03) shall be submitted with the bid. The procurement shall not be awarded to any bidder unless such bidder had submitted the PCA 03 certificate".
4. Interested bidders may obtain further information from **the Chief Engineer (Zone 2), Department of Buildings, Beach Road, Gurunagar, Jaffna** and inspect the Bidding Documents at the same address on any working day from 9:00hrs to 16:00 hrs.
   Contact numbers are: Phone: 021-2222781, Facsimile:021-2222781
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to theChief Engineer (Zone 2),Department of Buildings, Beach Road, Gurunagar, Jaffna from 22-05-2023 until 12-06-2023 from9:00hrs to 15:00 hrsupon payment of a non refundable fee of **Rupees Four Thousand(Rs.4,000/-).**
6. Bids shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee (Zone 2), Chief Engineer's Office (Zone 2), Department of Buildings, Beach Road, Gurunagar, Jaffna** to reachon or before 10:00 hrs on 13-06-2023 Bids will be opened soon after closing at the same address in presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid for a period of **77 Days** from the last date fixed for receiving of Bids or any extended period.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - in the form included in **Section 09** of the bidding document
   - in favour of **Director General of Buildings**
   - for an amount of **Rs.229,000.00**
   - valid up to **25th September 2023**
   - issued by one of the agencies indicated in the **ITB Clause 16.2** of the Bidding Data

**Eng.G.R.S.B.Gamlath**
**Director Construction (Region 2)**
**Department of Buildings**
**2nd Floor, "Sethsiripaya",**
**Battaramulla.**
**www.buildings.gov.lk**

(CR/39877)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
16 . 06 . 1943

மறைவு
31 . 05 . 2022

### அமரர் முத்துலிங்கம் நடராசா (பத்தர்)

அன்பின் இலக்கணமாய் எங்கள் அப்பா
பாசத்தின் உறைவிடமாய் எங்கள் அப்பா
பண்பின் சிகரமாய் எங்கள் அப்பா
தெய்வமாய் எங்கள் அப்பா
நாம் வாழ தம் வாழ்வை அர்ப்பணித்த தெய்வமே!
தாமின்றி தனியாக என் செய்வோம் எங்கள் அப்பாவே!
தம்பாசத்தின் வெள்ளத்தில் இறைவனும் அகப்பட்டானோ
தமை புவியில் விட மனமின்றி தன்னுடன் தான் இணைத்தானோ
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரர்த்திக்கின்றோம் அப்பா

45, நாயன்மார் வீதி,
நல்லூர்.

குடும்பத்தினர்

(cs.50467) (N.1)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு
18 . 05 . 1927

உதிர்வு
20 . 04 . 2023

### திருமதி மாணிக்கம் காசிப்பிள்ளை

கடந்த 20.04.2023 அன்று இறைபதம் எய்திய குடும்பத் தலைவி திருமதி **மாணிக்கம் காசிப்பிள்ளை** அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (20.05.2023) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து பல வழிகளிலும் உதவி புரிந்த அன்பு நெஞ்சங்களுக்கும் தொலைபேசி. சமூக ஊடகங்கள் ஊடாக ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும். பதாகைகள். மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும். சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் நோயுற்று அனுமதிக்கப்பட்ட போது உடனிருந்து மருத்துவ சேவை செய்த வைத்தியப் பெருந்தகைக்கும் அவரோடு உடனிருந்து பல வழிகளிலும் உதவி புரிந்த தாதிய உள்ளங்களுக்கும். இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிவவாசம்,
மீசாலைகிழக்கு, மீசாலை.

குடும்பத்தினர்.

(CS/39867)AH-1

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு



மலர்வு
20 . 05 . 1936

உதிர்வு
23 . 04 . 2023

கடந்த (23.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலமான
எமது குடும்ப விளக்கு


### அமரர் லீலாவதி செல்லையா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (21.05.2023) ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், ஆத்ம சாந்திப்பிரார்த்தனை எதிர்வரும் (23.05.2023) செவ்வாய்க் கிழமை நல்லூரிலுள்ள ஸ்ரீ துர்க்கா மணி மண்டபத்திலும் நடைபெறும். அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

17/2, மணல்தறை லேன்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

செல்லையா [illegible]
(அரசு - சகோதரன்)

## மரண அறிவித்தல்



பிறப்பு
10 . 10 . 1938

இறப்பு
18 . 05 . 2023

### இரத்தினம் அருமைத்துரை

(பிரபல விவசாயி)

உடுவில் தெற்கு. இணுவில் தெற்கு பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் அருமைத்துரை நேற்றுமுன்தினம் (18.05.2023) வியாழகிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான இராசதுரை நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும். மாங்களேஸ்வரியின் அன்புக் கணவரும். காலஞ்சென்ற பரராஜசிங்கத்தின் பாசமிகு சகோதரனும். காலஞ்சென்ற பரமுருகானந்தன். சிவமதி மற்றும் கீர்த்திசீலன் (சுவிஸ்). அருள்மதி. தர்மசீலன். பஞ்சசீலன் (லண்டன்). கலைமதி (இந்து கலாச்சார அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம். தெல்லிப்பளை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிவேதினி (சுவிஸ்). சண்முகநாதன். சிவமதி. வினோபா (லண்டன்). சகிபரன் ஆகியோரின் அன்பு மாமயாரும். நிதுலன் (சுவிஸ்). நிகிர்தன் (சுவிஸ்). நிவேதன் (சுவிஸ்). ஓவியா (லண்டன்). யினுசிகன். தனுசிகன் ஆகியோரின் அன்புப் பேரனும். காலஞ்சென்ற சந்திரதேவியின் மைத்துனரும். காலஞ்சென்றவர்களான தயாலினி. சுஜாதா. கஜன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (21.05.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

[illegible] - 0041 7861 46643
[illegible] லண்டன் - 0044 7424 038999
சிறி - இலங்கை - 077 359 2636

(cs 50489) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் வல்லிபுரம் சங்கரப்பிள்ளை

(விவசாய நண்பன்) கைதடி கிழக்கு, கைதடி)



**பிறப்பு 23.10.1926** **இறப்பு 22.05.1993**



வீரகத்திப்பிள்ளையார் அருள்பாலித்து நிற்கும் கைதடி நகரில் திரு.திருமதி வல்லிபுரம் பொன்னாச்சிப்பிள்ளை தம்பதிகளுக்கு 23.10.1926 அன்று சிரேஷ்ட புதல்வனாக திரு. சங்கரப்பிள்ளை அவர்கள் பிறந்தார்.

வையகம் போற்றும் விவசாய நண்பனாக வாழ்ந்த திரு. சங்கரப்பிள்ளை அவர்கள் பாசத்தின் இருப்பிடமான மனைவி சடைப்பிள்ளை, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளைப் பிரிந்து 22.05.1993 அன்று சிவபதம் அடைந்தார்.

என்னகத்தில் வாழும்
என் உயிர்க் கணவரே!

விண்ணகம் சென்றாலும்
எம்முடன் இணைந்திருக்கும்
எம் அருமைத் தந்தையே!

இனிய வாழ்வு எமக்கழித்த மாமாவே!

அன்னையாய் எமை வளர்த்த பாசமான பேரனே!

வையகம் போற்றிட வாழவைக்கும் பூட்டனே!

எம்மையெல்லாம்
நெஞ்சார நேசித்து மனதார வாழவைத்தீர்கள்
உங்களின் கடுமையான உழைப்பு
எங்களை கரைசேரவைத்தது.

மூபத்து ஆண்டுகள் கடந்திடினும்
இன்றும் உங்களின் வழிகாட்டலே
இவ்வுலகில் எங்களை சிறப்புடன் வாழவைக்கிறது.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**கைதடி கிழக்கு,**
**கைதடி.**

**மனைவி: திருமதி சடைப்பிள்ளை சங்கரப்பிள்ளை,**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

(cr.38118) (2.6)



## மரண அறிவித்தல்



**திருமதி மங்கையற்கரசி கதிர்காமசேகரம்**

(Ret.Nursing Officer, Govt.Teaching Hospital)

சண்டிலிப்பாய் வடக்கு, ஆலங்குழாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்கையற்கரசி கதிர்காமசேகரம் அவர்கள் நேற்று (19.05.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரவேற்பிள்ளை தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கதிர்காமசேகரத்தின் அன்பு மனைவியும், லக்ஸ்மன், ரவிசங்கர், குலசேகரன் ஆகியோரின் பாசமிகு தாயும், அகல்யா, ஞானரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமியும், வவிஸ்கர், வர்ஷா, அனுஸ்கர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நிவேதிதாதேவி, ஒப்பிலாம்பிகை, காலஞ்சென்ற ஞானபண்டிதர், செகராஜசேகரம், ஸ்ரீவித்தியாசாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.05.2023) சனிக்கிழமை பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (21.05.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கிரியைகள் இடம்பெற்று, நண்பகல் 12.30 மணியளவில் பொரளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.XB/8/1/3, அரச தொடர்மாடி,**
**எட்மண்டன் வீதி, கிருலப்பனை,**
**கொழும்பு-06.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**(தொ.பே: 077 770 6263**
**077 2260 404)**



## மரண அறிவித்தல்



**அழகரத்தினம் ஜெனச்சந்திரரட்ணம் (ஜெனா)**

பரவிப்பாஞ்சான், கிளிநொச்சியை பிறப்பிடமாகவும், 376, தேக்கவத்தை, வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட அழகரத்தினம் ஜெனச்சந்திரரட்ணம் (ஜெனா) அவர்கள் கடந்த 18.05.2023 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் தேவராணியின் பாசமிகு கணவரும் கோபிநாத், பத்மலோஜினி, ஜெகநாத், பிரியதர்சினி, கௌசிகா ஆகியோரின் அருமைத் தந்தையும் ரஞ்சிதமகள், பிரேமபாலன், தர்மரத்தின, பரசுதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் திலக்ஸன், ரதீஸ்வர், சஜீந்தனா, டக்ஸனா, ரிக்ஸிகா, ஹரிஸ்வர், ஜனிஸ்ற், மிசோபிகன், பிரியங்கா, டனிஸ்ரா, பிருத்திகா, ஜருஸன், ஜோவிதா, லதிஸன், ஸாம் ஆகியோரின் அருமைப் பேரனும் அழகரத்தினம் திலகவதிநாயகம் ஆகியோரின் அன்புப் புதல்வனும் கோபாலச்சந்திரநாயகம், சந்திரராணி, சந்திரபவானி, திலகச்சந்திரரத்தினம், சந்திரவதனி, அழகச்சந்திரநாயகம், ஆகியோரின் அருமைச் சகோதரனும் பேரம்பலம் ஜெயமணி ஆகியோரின் பாசமிகு மருமகனும் தேவராசா தேவரஞ்சன், தேவமனோகரன், தேவபாஸ்கரன், தேவகாந்தன், சபாராணி, தேவானந்தன், மோகன்ராஜ், திலகராஜ் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.05.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 1.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

**தொலைபேசி இலக்கம் :**
**077 2073667, 076 9348196**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


# பறவைகள் பூங்காவில் சட்டவிரோத செயற்பாடு

## மூவர் கைது



கிளிநொச்சி, மே 20

புளியம்பொக்கணை வண்ணத்தியாறு பகுதியில் அமைந்துள்ள பறவைகள் தேசிய வனப்பூங்கா பகுதியில் அனுமதியின்றி தடிகளை வெட்டிய குற்றச்சாட்டில் மூவரை வன ஜீவராசி திணைக்களத்தினர் நேற்றுக் கைதுசெய்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர்கள் தெரிவித்தனர்.

(ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டென்மார்க்கில்




# உரத்து ஒலித்தன நீதிக்கான குரல்கள்

கோபன்ஹேகன், மே 20

**முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 14 ஆவது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு தமிழின அழிப்புக்கு நீதி கோரி டென்மார்க் தலைநகரில் ஓங்கி ஒலித்த கோஷங்களுடன் ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.**

தமிழீழத் தேசியக்கொடிகளை பறக்கவிட்டு தேசியத் தலைவர் பிரபாகரனின் பதாகைகளை தாங்கிய வண்ணம் டென்மார்க் தலைநகரில் அமைந்துள்ள சதுக்கத்தில் பேரணி ஆரம்பமானது.

முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்புக்கு நீதி கோரி, உரத்த குரலிலான ஆர்ப்பரிப்புடன் டென்மார்க் நகர வீதிகள் ஊடாக நகர்ந்து நகரசபை சதுக்கத்தை பேரணி வந்தடைந்தது.

அங்கு முள்ளிவாய்க்கால் பேரவலத்தை வெளிப்படுத்தி வடிவமைக்கப்பட்ட நினைவுத்தூபிக்கு சுடரேற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்னர் டென்மார்க் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இளைஞர்கள், செயற்பாட்டாளர்களின் எழுச்சியுரைகளுடன் கவிதை நிகழ்வும் இடம்பெற்றது.

இறுதியில் தமிழரின் தாரக மந்திரமான "தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்" என்று கோஷம் உரக்க ஒலித்தது. தொடர்ந்து அடுத்த தலைமுறைக்கு கடத்தும் நோக்குடன் "முள்ளிவாய்க்கால் கஞ்சி" அனைவருக்கும் பரிமாறப்பட்டது. (ச-இ)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம். மே.20

பாதுகாப்பான போக்குவரத்துப் பாவனையை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துதல் தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல் யாழ்.மாவட்டச் செயலக வளாகத்தில் அமைந்துள்ள மாவட்டச் செயலர் அலுவலகத்தில் கடந்த 15ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றது.

பாடசாலை மாணவர்களை ஏற்றும் போக்குவரத்து வாகனங்களுக்கான வாகனத் தரிப்பிடங்களை சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆகிய இடங்களின் அருகாமையில் அமைத்தல், பழைய பூங்கா வீதியை ஒருவழிப் பயணப் பாதையாக மாற்றுதல் மற்றும் பாரவூர்திகள் பாடசாலை நேரங்களில் பயணிப்பதைத் தவிர்ப்பதற்கான சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்ளல், பாடசாலை ஆரம்பிக்கும், முடிவடையும் நேரங்களில் பொலிஸ் உத்தியோகத்தர்களின் தேவைப்பாட்டை மேற்கொள்ளல் ஆகிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. (ஒ-ரி-66)

✦ ✦ ✦

கிளிநொச்சி. மே.20

கிளிநொச்சி மாவட்டத்தில் உளசமூகத்துறையில் பணியாற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுடனான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட உளவளத்துணைப் பிரிவின் ஏற்பாட்டில் மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட மட்டத்தில் காணப்படும் உள சமூகப் பிரச்சினைகளை அடையாளங்காணல், குறைத்தல், தடுத்தல் மற்றும் தொடர் கண்காணிப்புக்களை மேற்கொள்ளுதல் நோக்கமாகக் கொண்டும் கடந்த கலந்துரையாடலின்போது எடுத்துக்கொள்ளப்பட்ட விடயங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும் உளவளத்துணை சார்ந்து பணியாற்றுபவர்களுக்கு துறைசார்ந்த பயிற்சிகளை வழங்குதல் தொடர்பாகவும் விசேட கவனம் செலுத்தப்பட்டது. (ஒ-ரி-113)

# மோட்டார் வாகன சான்றிதழில் மாற்றம்

யாழ்ப்பாணம். மே. 20

மோட்டார் வாகனப் பதிவுச் சான்றிதழில் மாற்றம் செய்வது தொடர்பாக மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

மோட்டார் வாகன பதிவுச் சான்றிதழில் வாகனம் தற்போதைய உரிமையாளர் மற்றும் முன்னைய உரிமையாளரின் பெயர்களை மட்டும் சேர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் கடந்த 17ஆம் திகதி புதன்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாய கம் தெரிவித்துள்ளார். (ஒ-ரி)

# காற்றால் வாழைகள் சரிவு

## செய்கையாளர்கள் பாதிப்பு

தற்போது வீசும் பருவக்காற்றால் வாழைகள் சரிந்து வீழ்கின்றன. அதனால் வாழ்வாதாரப் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளோம் என வாழைச்செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்,

தற்போது வீசும் கடும் காற்று காரணமாக வாழைமரங்கள் முறிந்து வீழ்கின்றன. அதனால் வாழைக்குலைகள் அதிகளவில் சந்தைகளுக்கு வந்து சேர்கின்றன. வாழைக்குலைகள் அதிகளவில் சந்தைக்கு கிடைக்கப்பெறுகின்றமையால் அவற்றின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. கதலி வாழைப்பழம் கிலோ 40 ரூபாவாக சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றது. விலைவீழ்ச்சி மற்றும் போதிய சந்தைவாய்ப்பின்மையால் பெரும் பாதிப்பை எதிர்நோக்கி யுள்ளோம் - என்றனர். (ச-17)

WE ARE HIRING

ASTP Tec Pvt Ltd, a well established computer and office automation products supplier and service provider in Northern Province

1. Accountant-Female-Any Knowledge in relevant field (Computer) with degree holder - Salary Negotiable
2. Hardware Technician-Min. 1Yr experience with NVQ Qualified Certificate holder with Motor bike Licence - Salary Negotiable

ஆர்வமுடையோர் 5 நாட்களிற்குள் stpjaffna@gmail.com எனும் முகவரிக்கு தங்கள் சுயவிபரக் கோவையை அனுப்பி வைக்கவும்.

Director
49, 1st Cross Street,
Jaffna

STP
Your partner in IT solutions

## மரண அறிவித்தல்

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம

### அமரர் பரமேஸ்வரி கந்தையா



தோற்றம் 10.08.1928 மறைவு 19.05.2023

வயாவிளானைப் பிறப்பிடமாகவும், சுழிபுரம் பத்திரகாளி கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் பரமேஸ்வரி கந்தையா அவர்கள் நேற்று (19.05.2023) வெள்ளிக்கிழமை காலமரனார்.

அன்னார் கந்தையா - செல்லாச்சி தம்பதியரின் மகளும், தம்பையா - பூரணம் தம்பதியரின் மருமகளும், அமரர் கந்தையாவின் அன்பு மனைவியும், கனகமணி, யோகம்மா, தவலாம்பிகை, காலஞ்சென்ற தயாநிதி, மகேந்திரகுமார் ஆகியோரின் தாயாரும் விஜயரத்தினத்தின் பெரிய தாயாரும் காலஞ்சென்ற சாம்பசிவம், பாலசுப்பிரமணியம், சந்திரகுமார், காலஞ்சென்ற சாந்தினி, பரமேஸ்வரி ஆகியோரின் மாமியும் பத்மதீபன் - சிந்துஜா, பிரதீபன், ஸதீபா - சசீகரன், தர்சிகா - ஜெயகாந், சஞ்சீவ் - திவ்ஜாவந்தி, சந்துஜன் - அபிலாஷினி, பவித்திரன், சிந்துஜா - சிவரூபன், லாவண்யா, யதீர்சன், கஜீபன் ஆகியோரின் பேர்த்தியும், அட்ஷயா, ஆதித், அநபாயன், ஆதிரா, ஆரோஹா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுழிபுரத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நாளை (21.05.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று திருவடிநிலை இந்து மயானத்தில் உடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 11 . 1974



மறைவு 18 . 05 . 2023

### கிருஸ்ணபிள்ளை சிவகுமார் (சிவா)

சோளங்கன் கரணவாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை சிவகுமார் (சிவா) அவர்கள் நேற்று முன்தினம் (18.05.2023) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் கிருஸ்ணபிள்ளை காலஞ்சென்ற ரேவதியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை கனகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், கிருபாதேவி (கிருபா) அவர்களின் ஆருயிர் கணவரும், அனுஜன் (அஞ்சித்தா), பிரசோன், சாருஷா (சாரு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராசன் செல்வகுமார் (ராசன் - சுவிஸ்), சுபாஜினி (சுபா - சுவிஸ்), சுகந்தினி (சுகந்தி - பிரான்ஸ்), பாலகுமார் (ராசா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (21.05.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவரசந்திட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
0779678766

சோளங்கன் கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

(CR 39878) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதித்...

களனி பல்கலைக்கழகத்துக்கு அருகில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது கைதுசெய்யப்பட்ட அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே உள்ளிட்டோரைப் பார்வையிடுவதற்காக நேற்று வெள்ளிக்கிழமை றாகம மருத்துவமனைக்குச் சென்றிருந்தபோதே சஜித் பிரேமதாஸ ஊடகங்களுக்கு இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்நாட்டுக் கடனை மறுசீரமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. மோல்டோவா, ஐவரிக் கோஸ்ட் உள்ளிட்ட 10 நாடுகள் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக்கள் இன்றி சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாட்டை எட்டியுள்ளன. இந்த அரசாங்கமே இவ்வாறானதொரு தீர்மானத்தை எடுத்துள்ளது.

மக்களிடமிருந்து உண்மையான தகவல்கள் மறைக்கப்பட்டே நாணய நிதியத்துடன் இணக்கப்பாட்டு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளது. இதன் காரணமாக நாட்டில் உள்ள 90 சதவீதமான மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

சேவைகள் வரையறுக்கப்பட்டுள்ளதன் காரணமாகவே வரிசைகள் இல்லாமல் போயுள்ளன. மக்களின் வாழ்க்கையை சீரழிக்கும் அரசாங்கத்துக்குப் பதிலாக, மக்களை வாழவைக்கும் அரசாங்கமே எமக்குத் தேவையாகும். தேர்தலையும், தேர்தலுக்கான நடவடிக்கைகளையும் இந்த அரசாங்கம் அழித்துள்ளது. நீண்ட காலத்துக்கு இவ்வாறு பயணிக்கமுடியாது. எனினும்,எமது கோரிக்கைக்கு ஏற்ப ஜனாதிபதித் தேர்தலை முற்கூட்டியே நடத்துவதற்கான தயார்ப்படுத்தல்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டுள்ளதாகத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. எனவே, எந்தச் சந்தர்ப்பத்தில் தேர்தல் நடத்தப்பட்டாலும், அதனை எதிர்கொள்ள நாம் தயாராகவே உள்ளோம். கட்சியிலிருந்து செல்பவர்கள் செல்லலாம், இணைபவர்கள் இணையலாம். ஆனால், எம்முடன் இணைபவர்களை கொள்கை அடிப்படையிலேயே நாம் இணைத்துக்கொள்வோம் - என்றார். (அ-ம-22)

## சுகாதார...

நியமிக்கப்படும் வரை, மருத்துவர் சத்தியமூர்த்தி யாழ். போதனா. மருத்துவமனைப் பணிப்பாளர் பதவிக்கு மேலதிகமாக இந்தக் கடமையை ஆற்றுவார் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-ம)

## சூனியத்தை...

புரிந்த சாமியாரை ஒட்டுசுட்டான் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

திருகோணமலையை சேர்ந்த சாமியார், பில்லி- சூனியத்தை நீக்குவதாக முத்தையன்கட்டு, ஜீவநகர் பகுதிக்கு அடிக்கடி வந்துசென்றுள்ளார். இந்தநிலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவைச் சேர்ந்த இரு பெண்களுக்கு சூனியம் நீக்குவதாகக் கூறி ஜீவநகர் பகுதியிலுள்ள வீட்டுக்கு அழைத்து அங்கு யுவதிகளிடம் பாலியல் சில்மிஷம் புரிந்துள்ளார். பாதிக்கப்பட்ட பெண்கள் தமது பெற்றோரிடம் இதனைத்தெரியப்படுத்தியதையடுத்து, ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் அவருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய ஒட்டுசுட்டான் பொலிஸார் போலிச்சாமியாரை கைதுசெய்ததுடன் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ச-19)

## வடக்கு...

வடமாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக, நேற்று மு.ப. 10 மணியளவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஆளுநர் சார்ள்ஸுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுக்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஊழல்வாதியை ஜனாதிபதி பதவிநீக்கம் செய்யவேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் ஆளுநர் அலுவலகம் சுற்றிவளைக்கப்பட்டுப் போராட்டம் நடத்தப்படும் என்றும் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக நேற்றுப் போராட்டமொன்று இடம்பெறவுள்ளதாக பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல்களின் அடிப்படையில், ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக நூற்றுக்கும் மேற்பட்ட பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது. எனினும், வெறும் ஆறு பேர் மட்டுமே இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர். (அ-ம-26)

## 8 பவுண்...

கள் திருடப்பட்டுள்ளன என்று பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

வீட்டிலுள்ளவர்கள் இல்லாத சமயத்தில் வீட்டின் கதவை உடைத்து நேற்றுமுன்தினம் இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. முறைப்பாடு தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26)

## பொலிஸ்...

மோதி விபத்துக்குள்ளானார். அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில், நேற்று உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## வடக்கு ஆளுநரின்...

தகவல்கள் தெரிவிக்கின்றன. வடமாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி சார்ள்ஸ் எதிர்வரும் வாரம் பதவியேற்கவுள்ள நிலையில் வாசஸ்தலத்தைத் தூய்மையாக்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் ஆளுநரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் உள்ள அறைகளில் போத்தல்களில் அடைக்கப்பட்ட மந்திரிக்கப்பட்ட பொருள்கள் காணப்பட்டதை அவதானித்த ஊழியர்கள் குறித்த விடயம் தொடர்பில் உயர் அதிகாரிகளுக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

அதிகாரிகள் முன்னாள் வடமாகாண ஆளுநரிடம் குறித்த விடயம் தொடர்பில் வினவியபோது, அவை மந்திரிக்கப்பட்ட பொருள்கள் எனவும் அவற்றினை நிலத்தில் கிடங்குவெட்டி புதைக்குமாறும் தெரிவித்துள்ளார். இதனையடுத்து ஆளுநரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்துக்கு இந்து மதகுரு ஒருவர் வரவழைக்கப்பட்டு மந்திரிக்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் உரிய முறையில் அகற்றப்பட்டு நிலத்தில் கிடங்கு வெட்டிப் புதைக்கப்பட்டன. (அ-ம)

## மாணவியை...

ரிகாஷா (வயது - 15) என்ற அந்த மாணவியை நேற்றுமுன்தினம் காலையில் இருந்து காணவில்லை என்று பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் விசாரணைகளை நடத்திவரும் பொலிஸார் காணாமற்போன மாணவியை அடையாளம் க்ண்டால், அது தொடர்பில் தெரியப்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளனர். (அ-ம-213)

## டிஜிற்றல்...

துறைசார் இராஜாங்க அமைச்சர் மற்றும் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார். கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் வரி சேகரிப்பு பணிகளுக்காக நிறுவப்பட்டுள்ள வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் கட்டமைப்பான ரெமிஸ் தொடர்பில் 1993ஆம் ஆண்டில் நான் பிரதமராகப் பதவி வகித்தபோது ஆராயப்பட்டது. ஆனால், 2023ஆம் ஆண்டிலும் இது தொடர்பில் பேசிக் கொண்டிருக்கின்றோம், இது கவலைக்குரியது. நாட்டை டிஜிற்றல் பொருளாதாரத்தை நோக்கிக் கொண்டுச் செல்லும் பணியை ஒருபோதும் தாமதப்படுத்தக்கூடாது. அதனைத் துரிதப்படுத்தினால் அதன் பயன்களை நாம் விரைவாகப் பெற்றுக்கொள்ளமுடியும்.

நாம் இப்போது 'ஈ - வணிகம்' யுகத்திலேயே வாழ்கிறோம். இருப்பினும் எமது நாட்டுக்குள் ஈ - வணிகச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு தாமதமாகிவிட்டது. டிஜிற்றல் மயமாக்கலை எவ்வாறு செய்யலாம் என்பது குறித்து அமைச்சர், செயலாளர், அதிகாரிகளுடன் நான் கலந்தாலோசித்தபோது அது தொடர்பிலான அறிக்கையொன்றை ஒரு மாதத்துக்குள் வழங்குமாறு அவர்களுக்கு பணிப்புரை விடுத்தேன்.

நாட்டுக்குள் டிஜிற்றல் பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான அனைத்துவித முயற்சிகளையும் நாம் முன்னெடுப்போம். இந்த செயற்பாட்டை புதிதாக அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. தென்னிந்தியாவின் தமிழ் நாட்டில் இந்த திட்டத்தை வலுவாக முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான இணையத்தள முறைமைகள் காணப்படுகின்றன. அது தொடர்பில் நான் இந்தியாவுடன் பேச்சுக்களை முன்னெடுக்கத் தயாராக இருக்கின்றேன். தமிழ் மற்றும் ஆங்கிலம் போன்ற இலங்கையில் பயன்பாட்டிலுள்ள மொழிகளே அங்கும் காணப்படுவதால் மேற்படி பணிகள் மேலும் எளிதாகும்.

டிஜிற்றல் மற்றும் பசுமை பொருளாதாரம் ஆகியவற்றை ஒன்றாக மேம்படுத்த வேண்டியது அவசியமாகும். பசுமைப் பொருளாதாரம் இன்று ஆசியாவின் வியாபாரச் செயற்பாடாக மாறியுள்ளது. அந்தப் பொருளாதாரத்தின் பெறுமதி 5 ட்ரில்லியன் ஆகும். அதனை ஆரம்பிப்பதற்கு நமக்கு 5 ட்ரில்லியன் அவசியமில்லை. சில பில்லியன் போதுமானது. அதனால் இந்த வேலைத்திட்டங்களோடு டிஜிற்றல் மயமாக்கலுக்குள் பிரவேசிக்க வேண்டியது அவசியமாகும். அதற்காக நாம் ஒருபோதும் பின்வாங்கக் கூடாது - என்றார். (அ-ம)

## விவாதத்தைப்...

கோரிக்கை விடுத்துள்ளார்.

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை பதவிநீக்கம் செய்வதற்காக மின்சாரத் துறை அமைச்சர் முன்வைத்த குற்றப் பிரேரணை மீதான விவாதம் எதிர்வரும் 24ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த விவாதத்தை தானும் தனது இரு பிள்ளைகளும் நேரில் பார்வையிட அனுமதி வழங்குமாறு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர், நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கடிதம் ஊடாகக் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-ம)

## மத்தியின்...

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரான சி.தவராஜா தெரிவித்தார்.

வடமாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளராக, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி பொறுப்பேற்றுள்ள நிலையில், இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணசபையில் நிறைவேற்றப்பட்ட சுகாதாரத் திணைக்கள நியதிச் சட்டம் பிரிவு 5 (1) இற்கு அமைய, சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவி மாகாண சபைக்குரிய விடயமாகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. மேலும் இந்த நியதிச் சட்டம் நடைமுறைக்கு வந்த திகதியிலிருந்து மத்திய சுகாதார சேவைகள் சட்டமோ அந்தச் சட்டத்தின் தத்துவத்தின் கீழே ஏற்படுத்தப்பட்ட சுற்றறிக்கைகளோ வடக்கு மாகாணத்தில் செல்லுபடியாகாது. (யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை தவிர)

மருத்துவர் சத்தியமூர்த்தி மத்திய அரசின் ஆளுகைக்குட்பட்ட யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் பதவியில் உள்ளார். அந்தப் பணிப்பாளர் பதவியை துறந்துவிட்டு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவியைப் பெறுவதாயின் எந்தவித ஆட்சேபணையும் இல்லை. அதனை முழுமனதுடன் வரவேற்பேன்.

ஆனால், அவர் மத்திய அரசின் கீழ் செயற்படும் யாழ்ப்பாண போதனா மருத்துவமனையின் பணிப்பாளராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் அதே வேளை, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவியையும் பொறுப்பேற்றிருப்பது எமது மாகாணசபையின் முறைமையை நலிவுறச் செய்யும். எனவே, இது தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ-ம-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் கடத்தல் முயற்சி; சந்தேகநபர்கள் அடையாளம்

மன்னார், மே 20

தலைமன்னார் கிராமப் பகுதியில் சிறுமிகளுக்கு இனிப்புப் பொருள்களை வழங்கி அவர்களைக் கடத்த முற்பட்ட இரு சந்தேகநபர்களையும் குறித்த சிறுமிகள். அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டினர்.

தலைமன்னார் கிராமப் பகுதியில் கடந்த வாரம் சிறுமிகளை வாகனமொன்றில் வந்தவர்கள் இனிப்புப் பொருள்களை வழங்கிக் கடத்த முற்பட்டனர்.

அதன்போது பொதுமக்களின் உதவியுடன் வாகனத்திலிருந்த இருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டு தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் மீது நான்கு வழக்குகள் தொடரப்பட்டு மன்னார் நீதிமன்றில் பொலிஸார் அவர்களை முற்படுத்தினர். இரு சந்தேகநபர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறும் அடையாள அணிவகுப்புக்குட்படுத்துமாறும் நீதிவான் கட்டளை பிறப்பித்தார். இந்தநிலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மன்னார் நீதிவான் கே.எல்.எம். சாஜுத் முன்னிலையில் சந்தேகநபர்களை அடையாளம் காட்டுவதற்காக அடையாள அணிவகுப்பு இடம்பெற்றது. இதில் கடத்த முயற்சிக்கப்பட்ட சிறுமிகள் மூவரும் இரு சந்தேகநபர்களையும் அடையாளம் காட்டி உறுதிப்படுத்தினர்.

அதனையடுத்து சந்தேகநபர்களை எதிர்வரும் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(ச-60)


## English Classes

Gr.1 to O/L

• Grammar • Spoken
• School Syllabus

(வீடு வந்து கற்பிக்கப்படும்)

T.P.: 077 331 4608 (யாழ்ப்பாணம்)

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றிற்கு முன் அனுபவமுள்ள **வர்ணப் பூச்சாளர் (Painter)** உடன் தேவை.

நேரில் சமுகமளிக்க வேண்டிய முகவரி:-
195, Temple Road, Nallur, Jaffna.

தொடர்பு:-
077 2514986, 077 8729 806

(CS 24912)A-1

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து ஒருவயதுக் குழந்தையைப் பராமரிக்கக் கூடிய பணிப்பெண் தேவை.
வயது - 30 - 60
விரும்பத்தக்கது.

077 967 2643

## பணியாளர்கள் தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல முன்னணி நகைவியாபார நிலையத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை

- **கணக்காளர்:** A/L வர்த்தக துறையில் படித்த வடிவான கையெழுத்துடைய ஆண்/ பெண் இருபாலாரும்
- **கணினி தரவு பதிவாளர்** (Data Entry Operator): O/L, ICT, A/L, Git படித்தவர்கள் (ஆண் / பெண்)
- **விற்பனை உதவியாளர்:** (ஆண் / பெண்)
- **சிட்டை எழுதுனர் :** வடிவான கையெழுத்து உடையவராக (ஆண் / பெண்)

(முன் அனுபவம் இல்லாதவர்களுக்கு வேலை கற்பிக்கப்படும்)

சுயவிபரக்கோவையுடன் முற்பகல் 10.00 மணிமுதல் நேரில் வரவும்

(cr. 39799) (N-1)

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
இல.30,32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தில் 52 பரப்புக் காணி விற்பனைக்கு.

* யாழ்ப்பாணத்திலிருந்து அராலி வட்டுக்கோட்டை செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
* யாழ். நகரில் இருந்து 1 1/2 km தூரத்தில்
* நான்கு பரப்பாகவும், மூன்று பரப்பாகவும், இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.
* ஒரு பரப்பின் விலை எட்டு இலட்சம் (800000/-) மட்டும்.

தொடர்பு: 076 739 0413

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 84 பரப்புக் காணி விற்பனைக்கு.

* கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 1/2 km தூரத்தில்
* பருத்தித்துறை வீதியில் இருந்து 1200 m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி)
* கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 பாதையுடன்
* குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
* ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் ரூபாய் (300,000/=) மட்டும்

தொடர்பு: 076 4365 814
077 065 4525

## குத்தகைக்கு தேவை

வான் / கார் தனியார் கம்பனிக்கு குத்தகைக்கு தேவை. தகுந்த பெறுமானம் வழங்கப்படும்.

(CS50486)(N-1) 077 971 5379

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 30 பரப்புக் காணி விற்பனைக்கு.

* பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் வீதியில்.
* புத்தூர் பிரதான தண்ணீர் தாங்கி அருகாமையில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில். 18 அடி பாதையுடன்.
* ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.

தொடர்பு: 077 638 5683
076 755 8606

## காணி விற்பனைக்கு

* யாழ்ப்பாணம் கீரிமலையில் 56 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.
* கீரிமலையிலிருந்து மாதகல் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
* 18 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* நல்ல சூழல். நன்னீர் ஊற்று நிலம். குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
* கீரிமலை சிவன் கோயில் (நகுலேஸ்வரர்) இருந்து 1 KM தூரம்.
* திருமண மண்டபங்கள், வியாபார நிலையங்கள், சுற்றுலா விடுதிகள், வீடுகள் அமைக்க உகந்த இடம்.
* காணியின் வடக்கு எல்லை கடல். தெற்கு எல்லை பிரதான காப்பற் வீதி முகப்பு (மாதகல் - கீரிமலை).
* ஒரு பரபப்பின் விலை - ஒன்பது இலட்சம் ரூபாய். (900000/=)



தொடர்பு: 076 911 9371
076 7390 413
077 8748 135

(CS 24909) A-1


## மரண அறிவித்தல்

பிறப்பு 31 . 03 . 1936



இறப்பு 18 . 05 . 2023

### திருமதி தங்கேஸ்வரி (அம்பிகா) அட்சலிங்கம்

நல்லூர் நாயன்மார் வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கேஸ்வரி (அம்பிகா) அட்சலிங்கம் நேற்று முன்தினம் (18-05-2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - மரகதம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இரத்தினம்-சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அட்சலிங்கத்தின் அன்பு மனைவியும், பிரபாகரன் (கனடா), தமயந்தி (லண்டன்), கோமதி (லண்டன்), காண்டீபன் (ஆஸ்திரேலியா), பிரதீபன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் (மகாலிங்கம்), காலஞ்சென்ற தெட்சணாமூர்த்தி (சோதி), காலஞ்சென்ற சந்திரசேனன், புவனேஸ்வரி, சரோஜினி, காலஞ்சென்ற சண்முகலிங்கம் (ரகு), காலஞ்சென்ற சற்குணலிங்கம் (லெட்சுமணன்), செல்வராணி ஆகியோரின் அன்புச்சகோதரியும், கஸ்தூரி (கனடா), உமாபதி (லண்டன்), கிருபானந்தன் (லண்டன்), சுஜிதா (ஆஸ்திரேலியா), சிந்தியா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரகாஷ், பிரமேஷ், மகிந்தன், மயூரன், மயூரி, திவ்வியராம், கோகிலராம், ஹறிசன், ஜீவிகா, ஆரவியின் (செல்லப்பேர்த்தி) அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21-05-2023) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11.00 மணிக்கு தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

70, நாயன்மார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(CS/50484)AH-1

தகவல்:
குடும்பத்தினர்.

பிரபாகரன்: +1 613-818-8900 தமயந்தி: +44 7554 713367
கோமதி: +44 7532 657005 காண்டீபன்: +61 422 411 166
பிரதீபன்: 070 411 6079, 077 311 6079



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.